REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 31 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 88 இல. 311 | December 31, Thursday, 2020 | 20 பக்கங்கள் | 30/-

வீட்டிலிருந்தவாறு மொபிடெல் உடன்
இணைந்து வேலை செய்யுங்கள்,
கல்வி பயிலுங்கள்
25GB ரூபா. 150/-
+ வரிகள்
செயற்படுத்துவதற்கு அழையுங்கள் #170#
*விசேடமாக தெரிவு செய்யப்பட்ட
பிளேட்போம்களுக்கு மட்டுமே
TRC/M/Promo/20/02
INTERNET 4G LTE
Sri Lanka Telecom Mobitel



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "கிராமத்துடன் கலந்துரையாடல்" எனும் நிகழ்வு நேற்று (30) அநுராதபுரம் கெப்பத்திகொல்லாவையில் நடைபெற்றபோது ஜனாதிபதி மக்களுடன் கலந்துரையாடியதை படத்தில் காணலாம்.

## 2021 ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு ஜன. 05இல்

### அங்கஜன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு





2021 ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு வாரத்தை ஜனவரி 05 ஆம் திகதி முதல் 08 ஆம் திகதி வரை கூட்டுவதற்கு நேற்று (30) முற்பகல் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அறிவித்துள்ளார்.

குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற்ற

06

## ஆயிரம் தேசிய பாடசாலைகள் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பம்

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வியை பெற்றுக் கொடுக்கும் அரசாங்கத்தின் நோக்கத்தின் கீழ் ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்றுக் காலை கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி செயற்றிட்டத்தின் கீழ் முதலாவது தேசிய பாடசாலையாக 200 வருடங்கள் பழமை வாய்ந்த ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு கோட்டேயில் உள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியாலயத்தில் நேற்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் நடைபெற்றது. இலவசக் கல்வியின் பிதா என அழைக்கப்படும் கலாநிதி சி. டபிள்யூ.

06

## அரச நிறுவனங்கள
## நிறுவனங்களாக மா





### அரசின் எதிர்கால திட்டம் குறித்து அமைச்சர் யாப்பா விளக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**





அரச நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொள்கின்றது. அவற்றை விற்பனை செய்வதாக கூறப்படும் விமர்சனங்களில் எந்தவித உண்மையும் கிடையாதென இராஜாங்க அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

உலகில் தனிமைப்படுத்தப்பட்ட நாடாக எமது நாடு மாறிவிடக் கூடாதென தெரிவித்த இராஜாங்க அமைச்சர்;

மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதே அரசாங்கத்தின் கடமையாகுமெனவும் தெரிவித்தார்.

ஏனைய நாடுகளுடன் தொடர்புகளை சிறப்பாக பேண வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்ற போது அது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்;

தனியார் துறை மற்றும் அரச துறைகளுக்கிடையிலான ஒத்துழைப்பு அவசியமாகின்றன. அதற்கு டெலிகொம் நிறுவனம் சிறந்த உதாரணமாகும். கொரோனா வைரஸ் நெருக்கடி நிலையில் பெருமளவு நிதியையும் உணவு பொருட்களையும் அரசாங்கம் மக்களுக்கு வழங்கியுள்ளது. தொடர்ந்தும் அனைவரது ஒத்துழைப்பும் அரசாங்கத்துக்கு அவசியமாகும்.

அரச வளங்களை விற்பனை செய்வதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அவற்றில் எந்த உண்மையும் கிடையாதென்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அரச

06

### மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம்;

## விசாரணைக்குழுவின் முழுமை அறிக்கை நீதியமைச்சரிடம்

### நேற்று தலைவி குசலாவினால் கையளிப்பு



**கே. அசோக்குமார்**

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் முழுமையான அறிக்கை நேற்று நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

மஹர சிறைச்சாலைக்குள் நடைபெற்ற அசம்பாவிதம் தொடர்பில் விசாரணைகளை

06

## ஜீவனுக்கு கொரோனா இல்லையென்பது உறுதி

### PCR முடிவில் தெரியவந்தது



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கு கொரோனா வைரஸ் தொற்றவில்லையென்பது பி.சி.ஆர் பரிசோதனை மூலம் நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்

06

## உக்ரைனிலிருந்து வந்த மூன்று சுற்றுலா பயணிகளுக்கு கொரோனா

### சுகாதார அமைச்சு வட்டாரம் உறுதிப்படுத்தியது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உக்ரைனிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகள் 03 பேருக்கு கொரானா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு தினமும் 3,000 பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

நேற்று முன்தினமும் அதற்கு முந்தைய நாளும் உக்ரைனிலிருந்து சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு முதற் கட்டமாக வருகை தந்திருந்தனர்.

06

## இன்றைய பண்டிகை தினம் தீர்மானம் மிக்கதொன்று

### எச்சரிக்கிறார் பிரதிப் பொலிஸ் மாஅதிபர்



இன்றைய தினத்துக்கான (31) பண்டிகை நிகழ்வுகளை குடும்பத்தாருடன் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு பிரதி பொலிஸ் மாஅதிபர், பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றைய தினம் தீர்மானம் மிக்கதாகும் என கூறிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண, குடும்பத்தினருடன் மாத்திரம் கொண்டாட்டங்களை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு கோரியுள்ளார். பொதுப் போக்குவரத்து மற்றும்

06

## இலங்கையின் அதிக வயதான பெண் மரணம்

### 117 ஆவது வயதில் உயிரிழந்தார்







இலங்கையின் மிக வயதான பெண்மணியாகக் கருதப்பட்ட களுத்துறை, தொடங்கொடையைச் சேர்ந்த 'வேலு பாப்பானி அம்மா' என அழைக்கப்படும் மூதாட்டி நேற்று முன்தினம் (29) பிற்பகல் காலமானார்.

இறக்கும் போது அவருக்கு 117 வயது என தெரிவிக்கப்படுகின்றது.

1903, மே 03 ஆம் திகதி, களுத்துறை மாவட்டம், தொடங்கொடை பிரதேச செயலக பிரிவில் உள்ள நேஹின்ன கிராமத்தில்

06

### காலிமுகத் திடலில் எழுமாறாக நடத்திய

## அன்டிஜன் சோதனையில் 9 பேருக்கு தொற்று உறுதி



## யாழ்.மாநகர சபையில் புதிய மேயராக மணிவண்ணன் தெரிவு

### ஆர்னோல்டை விடவும் ஒரு வாக்கு மேலதிகம்

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

### கொரோனா வைரஸ் மரணங்கள்;

## முஸ்லிம்களின் அதிகளவான மரணத்தில் அஸாத் சந்தேகம்

## சிரச நிறுவனத்திற்கு எதிரான தடை நீடிப்பு

ஜோர்ஜ் ஸ்டுவர்ட் ஹெல்த் நிறுவனம்